உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.302/2021

| | |
|---|---|
| பெயர் | : சண்முகபாண்டியன் (அ.சா.7) |
| தகப்பனார் பெயர் | :பழனிவேல் |
| கணவர் பெயர் | : |
| வயது | :41 |
| கிராமம் | : |
| வட்டம் | :சென்னை |
| தொழில் | :சார்பு ஆய்வாளர், பாதுகாப்பு குற்றபுலனாய்வு சென்னை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

12.03.2026

முதல் விசாரணை:

நான் தற்போது பாதுகாப்பு குற்றபுலனாய்வு துறை, சென்னையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 09.08.2019 அன்று மேலூர் காவல்நிலையத்தில் காலை 7.00 மணியளவில் பணியில் இருந்த போது, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தாலுகாவை சேர்ந்த முகமது கனி மகன் முகமது பரித் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, மேலுாார் காவல்நிலைய குற்ற எண்.472/2019 இதச பிரிவு 395ன்படி வழக்கு பதிவு செய்தேன். அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர், மேலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை உயர்அதிகாரிகளுக்கு விரைவு தபாலில் அனுப்பி வைத்தேன். மேல் விசாரணைக்காகமேலூர் வட்ட காவல் ஆய்வாளரிடம் விசாரணை கோப்பை ஒப்படைத்தேன். சாட்சியிடம் அ.சா.ஆ.1 புகார் காட்டப்பட்டு சாட்சி அதை பார்வையிட்டு முகமது பரித் என்பவர் காவல் நிலையத்தில் வைத்து புகாரை கொடுத்ததாக சாட்சி குறிப்பிடுகிறார். மேற்படி புகாரை பரிசீலனை செய்து நான் 09.08.2019 அன்று இதச பிரிவு 395ன்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்பந்தமாக ஆய்வாளரிடம் நான் கோப்பை ஒப்படைத்தேன் அவர் என்னை விசாரணை செய்தார். நான் நடந்தவற்றை வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

குறுக்கு விசாரணை :

புகாரானது, 09.08.2019 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் புகார் கொடுக்கப்பட்டது. அதற்கு முன்னால் முகமது பரித் என்பவர் காவல்நிலையத்திற்கு முன்னிலையானாரா என்றால் இல்லை. புகாரை பெற்றவுடன் சம்பவ இடத்திற்கு சென்று நான் சம்பவ இடத்தை ஆய்வு செய்த பிறகு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேனா என்றால் இல்லை. புகாரை பெற்றவுடன் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து கோப்புகளை ஒப்படைத்த பிறகு சம்பவ இடத்திற்கு ஆய்வுக்கு சென்றோம்.நான் ஆய்வாளரோடு சென்று சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்தேன் என்ற பவிபரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆய்வாளர் என்னிடம் கேட்காததால் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது விசாரணையில் புகார் மற்றும் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தது தொடர்பாக கோப்புகளை எப்போது ஆய்வாளர் விசாணைக்கு உட்படுத்தினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்தவிதமான விசாரணையும் செய்யாமல் அ.சா.1 கொடுத்த புகாரை பரிசீலனைக்கு எடுத்து கொள்ளாமல் தவறாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்றால்சரியல்ல.

நீதிமன்ற கேள்வி :

முதல் தகவல் அறிக்கையில் யார் குற்றம் செய்தார்கள் என்ற பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை அடையாளம் தெரியாத நபர் என்பதால் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.12 10:19:10 +0530

Assistant Sessions Judge

Melur